# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**

(~~Under Section 154 Cr.P.C.~~) 173 BNSS
(~~கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

C 8120332

1. District : நாமக்கல் PS: ஊ.த.க.பிரிவு Year: 2025 FIR No.: 1/AC/2025 Date:
மாவட்டம் காவல்நிலையம் நாமக்கல் ஆண்டு மு.த.அ. எண் நாள் 14.01.2025.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 13.01.2025 நாள் முதல் நாள் வரை
Time Period : 19.00 மணிக்கு மேல் Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.01.2025 நேரம் 03.30 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-I, 14.01.2025 நேரம் 03.30 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : ✓ Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 1 Km மேற்கு.
Beat Number : (b) Address : நாமக்கல் To திருச்செங்கோடு செல்லும் ரோட்டில்
முறைக் காவல் எண் முகவரி கரூர் To சேலம் பைபாஸ் மேம்பாலத்திற்கு அருகில்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மு. சுபாஷிணி தந்தை / கணவர் பெயர் திரு. முருகேசன்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 1988 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
தொழில் காவல் துணைக் கண்காணிப்பாளர் முகவரி அலுவலகம், நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. K.L.K. வள்ளல் (வயது 54), த/பெ. கமலேசன், உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகம், 2-வது தளம், மாவட்ட ஆட்சியரகம், நாமக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91, நாள்: 14.01.2025-ன் மூலம் அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 14/01/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 14/01/25

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name பெயர் மு. சுபாஷினி,
Rank நிலை ...................... No. எண் ..........
காவல் நிலைய ஆய்வாளர்,
உ.நு.த.க. பிரிவு, நாமக்கல்.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14.01.2025 காலை 05.00 மணி

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.1/AC/2025, u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-12 இன் விபரம்;-**

நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 13.01.2025-ஆம் தேதி திங்கள்கிழமை இரவு 19.35 மணிக்கு நாமக்கல் to திருச்செங்கோடு செல்லும் ரோட்டில் கரூர் to சேலம் பைபாஸ் மேம்பாலத்திற்கு அருகில் நாமக்கல் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வரும் திரு.கு.லி.க.வள்ளல் அவர்கள் பயன்படுத்திவரும் பதிவு எண் TN 42 AM 4678 கொண்ட Toyota Urban Crusier Hyryder காரில் வைத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையை தொடர்ந்து, அன்று இரவு 20.15 மணி முதல் 14.01.2025 அதிகாலை 01.30 மணி வரை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இரண்டாவது தளத்தில் செயல்பட்டுவரும் உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, நாமக்கல் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகள் அடிப்படையில் இன்று 14.01.2025-ஆம் தேதி அதிகாலை 03.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2025, u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் விபரம் பின்வருமாறு:

இன்று 13.01.2025 ஆம் தேதி மாலை 17.00 மணியளவில் நாமக்கல் மாவட்டம் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் திரு. கு.லி.க. வள்ளல் அவர்கள் தனது பதவியை தவறாகப் பயன்படுத்தி தனது கட்டுப்பாட்டின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் குவாரி உரிமையாளர்களிடம் இருந்து அவர்களது குவாரிகளுக்கு தேவையான உரிமங்களை புதுப்பித்து தருவதற்காகவும், குவாரிகளில் கல்வெட்டி எடுப்பதற்கு அதிக கொள்ளளவில் பர்மிட் போட்டு குவாரி உரிமையாளர்கள் குவாரி இயக்குவதையே நிறுத்திவிடுவதாக கூறி குவாரி உரிமையாளர்களிடம் லஞ்சமாக மாதாந்திர மாமூல் பெற்று வருவதாகவும், அவ்வாறு பெறும் மாமூல் தொகைகளை அவ்வப்போதோ அல்லது வார இறுதி நாட்களிலோ அவர் கோயம்புத்தூரிலுள்ள தனது வீட்டிற்கு செல்லும்போது நாமக்கல்லில் இருந்து திருச்செங்கோடு செல்லும் வழியில் ஏதாவது ஒரு இடத்தில் இருந்து பெற்றுக் கொண்டு அந்த லஞ்சப் பணத்தை தான் பயன்படுத்திவரும் TN 42 AM 4878 Toyota Urban Cruiser Hyryder என்ற நான்கு

சக்கர வாகனத்தில் எடுத்துச் செல்வதாகவும், அதேபோல் கடந்த டிசம்பர் 2024 மாதத்திற்குரிய மாதாந்திர மாமூல் தொகையை இன்று 13.01.2025 ஆம் தேதியன்று வசூல் செய்து வருவதாகவும், அவ்வாறு இன்று வசூல் செய்யும் லஞ்சப் பணத்துடன் இன்று மாலை அலுவல் முடித்தவுடன் கோயம்புத்தூரில் உள்ள தனது வீட்டிற்கு செல்லவிருப்பதாகவும், கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக காவல் துணைக் கண்காணிப்பாளர், அரசு சாட்சிகள் நாமக்கல் மாவட்டம், புதன் சந்தை, தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், உதவி செயற் பொறியாளர், (இயக்கமும் பராமரிப்பும்) திரு. R. பிரேம்நாத் மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர், பேட்டபாளையம், சேலம் மத்திய கூட்டுறவு சர்க்கரை ஆலை எதிரில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வேளாண்மை அலுவலராக பணியாற்றி வரும் திரு. மு. வித்யானந்தபதி மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இரவு 19.00 மணியளவில் புறப்பட்டு நாமக்கல் to திருச்செங்கோடு செல்லும் ரோட்டில் கரூர் to சேலம் பைபாஸ் மேம்பாலத்திற்கு அருகில் TN 22 G 0055 என்ற அரசு வாகனத்தில் சென்று சேர்ந்து அங்கு ஆங்காங்கே மறைவாக காத்திருந்தபோது இரவு சுமார் 19.35 மணியளவில் மேம்பாலத்திற்கு மேற்கு பக்கமாக கரூரில் இருந்து சேலம் செல்லும் பைபாஸ் சாலை மற்றும் நாமக்கல்லில் இருந்து திருச்செங்கோடு செல்லும் சாலை சந்திக்கும் நான்கு ரோட்டின் தெற்கு பக்கமாக இருந்து வடக்கு நோக்கி வந்து மேற்காக திருச்செங்கோடு செல்லும் சாலையில் TN 42 AM 4878 Toyota Urban Cruiser Hyryder என்ற நான்கு சக்கர வாகனம் திரும்பியபோது அங்கு மறைவாக கண்காணித்துக் கொண்டிருந்த காவல் துணைக் கண்காணிப்பாளர், அரசு சாட்சிகள் மற்றும் போலீஸ் பார்ட்டியினரால் திரு.கு.லி.க. வள்ளல் அவர்கள் வந்த அந்த காரை சோதனைக்காக மேற்படி நான்கு ரோடு சந்திப்பில் தெற்கு பக்கமாக ரோட்டின் ஓரமாக நிறுத்தப்பட்டது. அந்த காரில் டிரைவர் சீட்டிற்கு பின்புறம் வலது புறமாக அமர்ந்திருந்த நபரைபற்றி விசாரிக்க அவர் தான் நாமக்கல் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் என்றும், தனது பெயர் வள்ளல் என்றும் தெரிவித்தார். அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் செபஸ்டி பெர்ணான்டோ என்றும், தான் உதவி இயக்குநரின் கார் ஓட்டுனர் என்றும் தெரிவித்தார். பின்னர் உதவி இயக்குநர் திரு. கு.லி.க. வள்ளல் அவர்களிடம் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள்

தன்னையும், தன்னுடன் வந்த அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்தவுடன் அவர் காருக்குள் அமர்ந்திருந்த நிலையில் மிகுந்த பதட்டத்துடன் காணப்பட்டார். காவல் துணைக் கண்காணிப்பாளர் அவரை ஆசுவாசப்படுத்தி, அவரை விசாரிக்க அவர் தனது சொந்த ஊர் தருமபுரி மாவட்டம், அரூர் திரு.வி.க. நகர் என்றும் தற்பொழுது தான் கோயம்புத்தூரில் May Flower Apartment, Sakthi Garden, 4-B, Olive Block, Nanjundapuram Main Road, Ramanathapuram என்ற முகவரியில் தனது மனைவி கமலி அவர்களுடன் வசித்து வருவதாகவும், தான் தற்போது நாமக்கல் மாவட்டம் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநராக 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் பணியாற்றி வருவதாகவும், ஒவ்வொரு வாரமும் வார இறுதி நாளில் தான் தற்பொழுது குடியிருந்து வரும் கோயம்புத்தூருக்கு சென்று விடுவதாகவும் தெரிவித்தார். மேலும் இன்று திங்கள் கிழமைக்கு பிறகு பொங்கல் விடுமுறை நாட்கள் வருவதால் தான் இன்று பணி முடித்துவிட்டு தான் தங்கியிருந்த பெரியபட்டி ரோட்டிற்கு அருகில் உள்ள வீட்டிற்கு சென்றுவிட்டு தற்பொழுது கோவைக்குச் சென்றுகொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அதன் பின்னர் சாட்சிகள் முன்னிலையில் மேற்படி அவர் வந்த வாகனம் சோதனையிடப்பட்டது. சோதனையின்போது உதவி இயக்குநர் திரு. கு.லி.க. வள்ளல் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு இடது பக்க இருக்கைக்கு கீழ் பகுதியில் American Tourister என்ற வெள்ளை எழுத்துக்களால் பெயர் பொறிக்கப்பட்ட நீல நிற டிராவல்ஸ் பேக் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்த நீல நிற டிராவல்ஸ் பேக்கை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் பயன்படுத்தப்பட்ட சட்டைகள், பேண்டுகள் மற்றும் துணிகள் இருந்தது. அந்த துணிகளுக்கு கீழ் 100 Years of sild heritage RMKV Wedding Silks, Chennai / Tirunelveli/ Coimbatore/ Bengaluru, toll free No.18004253105, shop online at www.rmkv.com என இரண்டு பக்கமும் ஆங்கிலத்தில் சிகப்பு மற்றும் மஞ்சள் கலரில் பிரிண்ட் செய்யப்பட்டிருந்த ஒரு வெள்ளை துணிப் பையை சோதனை செய்தபோது அதில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் கத்தைகளாக வைக்கப்பட்டிருந்தது. அந்த தொகைகள் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் முதலில் எந்த ஒரு பதிலும் சொல்லாமல் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். மீண்டும் அந்த தொகை பற்றி காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டபோது அப்பொழுதும் பதில் ஏதும் சொல்லாமல் தொடர்ந்து மௌனமாகவே அமர்ந்திருந்தார். அதன் பின்னர் மீண்டும் ஒருமுறை அந்த

துணிப்பையில் எவ்வளவு தொகை உள்ளது என்று கேட்ட போது அதற்கும் எந்த ஒரு பதிலும் சொல்லாமல் சிறிது நேரம் அமர்ந்திருந்துவிட்டு அதன் பின்னர் அந்த பையில் எவ்வளவு தொகை உள்ளது என்று தனக்கு தெரியாது என்று கூறினார். அந்த தொகை எதற்காக வைத்துள்ளீர்கள் என்று கேட்டபோது பதில் எதுவும் சொல்லாமல் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு அதன் பின்னர் அந்த தொகை நாமக்கலில் கிரசர் வைத்துள்ள மணி என்பவர் தன்னிடம் கொடுத்து அவருடைய உறவினர் கோவையில் உள்ளதாகவும், அவரிடம் அந்த தொகையை கொடுத்துவிடுமாறு கூறினார் என்றும், எனவே அவர் கொடுத்த அந்த தொகையை மணியின் உறவினரிடம் கொடுப்பதற்காக எடுத்துச் செல்வதாகவும் கூறினார். அந்த சமயத்தில் மேற்படி இடத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாலும், கூட்டம் அதிகமாக கூடியதாலும் திடீர் சோதனைக் குழுவினர் உதவி இயக்குநர் திரு.கு.லி.க. வள்ளல் அவர்களை அவரது வாகனத்திலேயே அமரும்படி சொல்லி ஓட்டுநர் திரு.செபஸ்டி பெர்ணான்டோ மூலம் மேற்படி வாகனத்தை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு இரவு சுமார் 20.00 மணியளவில் சென்று அதன் பின்னர் இரண்டாவது தளத்தில் செயல்பட்டு வரும் திரு. கு.லி.க. வள்ளல் அவர்களின் அறைக்கு சென்றபோது அந்த அறை முன்புறமாக பூட்டப்படாமல் தாழிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் அந்த அறையை திரு. கு.லி.க. வள்ளல் அவர்கள் மூலமாக திறக்கச் செய்து உள்ளே சென்ற சோதனைக் குழுவினர் திரு. கு.லி.க. வள்ளல் அவர்களை அவரது இருக்கையில் அமரச்செய்தனர். அதன் பின்னர் மீண்டும் அந்த துணிப்பையில் எவ்வளவு தொகை உள்ளது என்று கேட்டபோது அதில் எவ்வளவு தொகை உள்ளது என்று தனக்கு தெரியாது என்று கூறினார். மேலும் அந்த தொகை எதற்காக வைத்துள்ளீர்கள் என்று கேட்டபோது ஜெயமணி கிரசர் ஓனர் திரு. மணி என்பவர் கொடுத்த தொகை என்றும், அதை கோவையில் உள்ள அவரது உறவினரிடம் கொடுக்கச் சொல்லி கொடுத்தார் என்றும் மீண்டும் தெரிவித்தார். அதன் பின்னர் சாட்சிகள் முன்னிலையில் அந்த துணிப்பையில் இருந்த தொகையை பார்த்தபோது அதில் 5 கட்டுக்களாக 500 ரூபாய் நோட்டுக்களும் நான்கு பெரிய பண்டில்களாக 500 ரூபாய் நோட்டுக்களும் ரப்பர்பேண்ட் போடப்பட்ட நிலையில் இருந்தது. அந்த ஐந்து கட்டுக்களை எண்ணிப் பார்த்த போது முதலாவது கட்டில் 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.50,000/–மும், இரண்டாவது கட்டில் 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.50,000/– மும், மூன்றாவது கட்டில் 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.50,000/– மும், நான்காவது கட்டில் 100 ஐநூறு ரூபாய்

நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.50,000/– மும், ஐந்தாவது கட்டில் 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.50,000/– மும், ஆக மொத்தம் **ரூ.2,50,000/–** இருந்தது. அதன் பின்னர் பெரிய பண்டில்களில் இருந்த தொகைகளை எண்ணிப்பார்த்தபோது அதில் கீழ்க்கண்டவாறு தொகைகள் இருந்தது. அதன் விவரம்.

| வரிசை எண். | கட்டுக்களின் விவரம் | நோட்டுக்கள் எண்ணிக்கை | | தொகை |
|---|---|---|---|---|
| 1. | முதலாவது பெரிய கட்டு | 1. 500X100 | 50,000.00 | |
| | | 2. 500X100 | 50,000.00 | |
| | | 3. 500X100 | 50,000.00 | |
| | | 4. 500X100 | 50,000.00 | |
| | | 5. 500X100 | 50,000.00 | 2,50,000.00 |
| 2. | இரண்டாவது பெரிய கட்டு | 1. 500X100 | 50,000.00 | |
| | | 2. 500X100 | 50,000.00 | |
| | | 3. 500X100 | 50,000.00 | |
| | | 4. 500X100 | 50,000.00 | |
| | | 5. 500X100 | 50,000.00 | 2,50,000.00 |
| 3. | மூன்றாவது பெரிய கட்டு | 1. 500X100 | 50,000.00 | |
| | | 2. 500X100 | 50,000.00 | |
| | | 3. 500X100 | 50,000.00 | |
| | | 4. 500X100 | 50,000.00 | |
| | | 5. 500X100 | 50,000.00 | 2,50,000.00 |
| 4. | நான்காவது பெரிய கட்டு | 1. 500X100 | 50,000.00 | |
| | | 2. 500X100 | 50,000.00 | |
| | | 3. 500X100 | 50,000.00 | |
| | | 4. 500X100 | 50,000.00 | |
| | | 5. 500X100 | 50,000.00 | 2,50,000.00 |
| | மொத்தம் | | | 10,00,000.00 |

ஆக அனைத்து கட்டுகளிலும் சேர்ந்து மொத்தம் ரூ. 12,50,000/– இருந்தது. மேற்படி இந்த மொத்த தொகை ரூ.12,50,000/– த்தை உதவி இயக்குநர் திரு. வள்ளல் அவர்கள் தான் வைத்திருப்பதற்கான காரணம் எதையும் முதலில் தெரிவிக்காமல் இருந்து விட்டு அதன் பின்னர் திரு. மணி என்பவர் அவரது உறவினர் கோவையில் உள்ளதாகவும் அவரிடம் கொடுக்கச்சொல்லி தன்னிடம் கொடுத்ததாகவும் கூறிய காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாததாலும் அவர் அந்த தொகைகளை வைத்திருந்த விதம்

சந்தேகத்திற்குரியதாக இருந்ததாலும் மேற்படி அந்த தொகை ரூ.12,50,000/– மும் மேலே சொன்ன துணிப்பையுடன் சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் திடீர் சோதனைக் குழுவினர் நீல நிற டிராவல் பேக்கின் வெளிப்பக்கமாக உள்ள ஜிப்பை திறந்து சோதனை செய்தபோது அதில் I am Cool என்று ஊதாக் கலரில் பிரிண்ட் செய்யப்பட்ட வெளிர் மஞ்சள் நிற ரெக்சின் பேக் ஒன்று இருந்தது. அந்த ரெக்சின் பேக்கினை திறந்து சோதனை செய்தபோது அதில் Government of Tamil Nadu, Commissionerate of Geology and Mining, Guindy, Chennai -32 வழங்கப்பட்டுள்ள முனைவர். கு.லி.க. வள்ளல், உதவி இயக்குநர், என தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விவரங்கள் பதியப்பட்ட அடையாள அட்டை மற்றும் அதன் பின்புறத்தில் DOB 12.05.1969 எனவும், DOJ 26.03.2008 எனவும், GPF/CPS No.7059712/MISC எனவும், Employee No. 27040778151 எனவும், Residential Address Dr. K.L.K. Vallal, May Flower Apartment, Sakthi Garden, 4-B, Olive Block, Nanjundapuram Main Road, Ramanathapuram, Coimbatore 641 036 என விவரங்கள் உள்ளது. மேலும் 6688 0480 2468 என்ற எண் கொண்ட ஆதார் அட்டையும் மற்றும் சாமி படங்கள் உள்ளது. மேலும் 500 ரூபாய் நோட்டுக்கள் நான்கு, 200 ரூபாய் நோட்டு ஒன்று, 50 ரூபாய் நோட்டுக்கள் இரண்டு ஆக மொத்தம் ரூ.2,300/– இருந்தது பற்றி கேட்டபோது அது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ள பணம் என்று கூறிய காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருந்ததால் அந்த பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. உதவி இயக்குநர் அவர்களிடம் வேறு பணம் ஏதாவது வைத்துள்ளீர்களா என்று கேட்டபோது அவர் தனது சர்ட்டின் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் மூன்று 100 ரூபாய் நோட்டுக்கள், ஒரு 50 ரூபாய் நோட்டு, ஒரு 20 ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரூ.370/– இருந்தது. அந்த தொகை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவர் சொன்ன காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருந்ததால் மேற்படி தொகை ரூ.370/– சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திடீர் சோதனைக் குழுவினர் கார் ஓட்டுனர் திரு.செபஸ்டி பெர்ணான்டோ அவர்களை விசாரித்தபோது அவர் தனது சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம், புலிவலம், லேனா விளக்கு என்றும், தான் கடந்த ஒரு மாதமாக உதவி இயக்குநர் அவர்களின் தனிப்பட்ட வாகன

ஓட்டுனராக பணியாற்றி வருவதகாவும், பிக் அப் அண்ட் டிராப்பிற்கு ரூ.2,000/– பெற்று வருவதாகவும் கூறினார். தற்பொழுது சில்வர் கிரே கலர் டொயோட்டா அர்பன் குருசர் என்ற வாகனத்தை ஓட்டிவருவதாகவும் தெரித்தார். இன்று தான் உதவி இயக்குநரை கோவையில் உள்ள அவரிது வீட்டில் விட்டுவர செல்வதற்காக காரை ஓட்டி வந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது அவர் தனது பேன்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்த மணிபர்சில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த நோடுக்களை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் நூறு ரூபாய் நோட்டு ஒன்றும், இருபது ரூபாய் நோட்டு ஒன்றும் ஆக மொத்தம் ரூ.120/– இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அது பஸ் செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். ஓட்டுனரிடம் மேற்படி காரில் இருந்த தொகை பற்றி கேட்டபோது தனக்கு அது பற்றிய விவரம் தெரியவில்லை என்று கூறினார். ஓட்டுனரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் சாட்சிகள் முன்னிலையில் திரு. மணி என்பவரின் 94433 44331 என்ற செல் போன் எண்ணிற்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் 94981 90735 என்ற செல் போன் எண்ணிலிருந்து தொடர்புகொண்டு பேசியபோது அவர் தான் இன்று மாலை திரு. வள்ளல் அவர்களை குவாரி விசயமாக சந்திப்பதற்காக அவரது அலுவலகம் சென்றதாகவும், அதன் பின்னர் மாலை சுமார் 7.00 மணியளவில் அவருடைய வீட்டிற்கு மீட்டிங் சம்பந்தமாக பேசுவதற்காக சென்றதாகவும் தெரிவித்தார். திரு. வள்ளல் அவர்கள் ரூ.12,50,000/–த்தை தாங்கள்தான் அவரிடம் கொடுத்தாக சோதனையின்போது கூறுகிறார் என்று தெரிவித்தபோது அதற்கு அவர் தான் பணம் எதுவும் உதவி இயக்குநரிடம் கொடுக்கவில்லை என்று தெரிவித்தார். மேற்படி விவரங்களை செல்போன் ஸ்பீக்கர் மோடில் போடப்பட்டு சாட்சிகள் இருவரும், காவல் துணைக் கண்காணிப்பாளரும் மற்றும் திரு. வள்ளல் அவர்களும் கேட்டனர். அதன்பிறகு மேற்படி காரை சோதனை செய்தபோது வேறு பணமோ, பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. பிறகு உதவி இயக்குநர் திரு. வள்ளல் மற்றும் டிரைவர் திரு.செபஸ்டி பொர்ணான்டோ ஆகியோரை விசாரணைக்கு தேவைப்படும்போது அழைப்பதாகவும், அப்போது விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. உதவி இயக்குநர் திரு. வள்ளல் அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. மேலும் திரு. வள்ளல் அவர்களின் அலுவலக அறைக்கு கிழக்கு பக்கத்து அறையில் பணிசெய்து கொண்டிருந்த திரு.பெ. நந்தக்குமார், உதவி

புவியியலாளர் மற்றும் திரு.மு. மகேந்திரன், மாவட்ட கனிம அறக்கட்டளை தரவு பதிவாளர் ஆகியோர்களை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டு சாட்சிகள் மூலமாக தொகை எண்ணியபோதும் மற்றும் உதவி இயக்குநரிடம் விசாரணை மேற்கொண்டபோதும் அருகில் இருந்தனர். திரு.பெ.நந்தக்குமார் மற்றும் திரு.மு.மகேந்திரன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த மகஜர் 14.01.2025–ஆம் தேதி அதிகாலை 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.12,50,000/-க்கு உதவி இயக்குநர் அவர்களால் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அவர் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த தொகைகள் முறையற்ற வகையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவரால் குவாரி உரிமையாளர்களிடம் இருந்து பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் அவர் குவாரி உரிமையாளர்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்து கொடுப்பதற்காக அவை முறையற்ற வகையில் அவரால் அவர்களிடமிருந்து பிரதிபலானாக பெறப்பட்ட பணமாக இருக்கக் கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி உத்திரவு பெற்று இன்று 14.01.2025-ஆம் தேதி அதிகாலை 03.30 மணிக்கு எதிரி திரு.கு.லி.க.வள்ளல், த/பெ.கமலேசன், உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், இரண்டாவது தளம், நாமக்கல் மாவட்டம் என்பவர் மீது நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.1/AC/2025, u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்பமை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

14/1/25

(மு. சுபாஷிணி)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.